# காந்தள் நாட்கள் : இன்குலாப் கவிதைகளில் சாதிய எதிர்ப்புகள்

முனைவர் சா. பாலமுருகன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கலை மற்றும் அறிவியல் புலம்
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 126

73

சாதிதான் சமூகம் என்றால் வீசும் காற்றில் விசம் பரவட்டும் – அம்பேத்கர் ஆகச்சிறந்த படைப்புகளைத் தந்த போதிலும் தமிழ்ச்சமூகம் கவனிக்க மறந்துவிட்ட படைப்பாளி இன்குலாப். இன்குலாப் என்பதன் பொருள் புரட்சி. இன்குலாப்பின் கவிதைகள் அனைத்தும் அவரின் பெயரின் பொருளையே தாங்கி அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

இயற்கை, காதல், சாதியம், பெண்ணியம், ஈழம், சமய மறுப்பு, பொதுவுடமை, கனவு அரசியல், விடுதலைப் பெற்றுவிட்டதன் மீதான நம்பிக்கையின்மை, சமூகச் சீர்கேடுகள் எனப் பன்முகப்பட்ட களங்களில் மக்களின் வாழ்வாதாரங்கள் குறித்த அக்கறையோடு பதிவு செய்யப்பட்ட இவருடைய கவிதைகளால் 'மக்கள் கவிஞராக' அறியப்படுகிறார். மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் போக்கு எப்போதும் கண்டிக்கத்;;;தக்கது என்ற அடிப்படையில் பெரும்பான்மை சாதியத்தை முன்வைத்து கலகத்தில் ஈடுபட்டுவரும் சாதியவாதிகள் மீதான பெருங்கோபம் இன்குலாப் கவிதைகளில் வெளிப்பட்டுள்ளது. காந்தள் நாட்கள் என்ற கவிதைத் தொகுப்பை மையமாகக் கொண்ட கவிஞரின் சாதிய எதிர்ப்புகள் பற்றிய பதிவுகளைக் கட்டுரையில் காண முடியும்.

**சாதி – உருவாக்கமும் சூழ்ச்சியும்**

மனிதத் தோற்றத்தின்போது இல்லை என்பதும், அழிவின்போது கண்டுகொள்ளப் படாததென்பதும் சாதிக்கு மிகப்பொருந்தும். மனிதர்களைப் பிரித்தாளும் செயலை சாதி இன்றளவும் பற்றிக்கொண்டிருப்பது காலத்தின் பேரவலம். மனித நல்லிணக்கத்தைப் போற்றாத, ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி, பாகுபாட்டிற்கு இடமளிக்கும் எந்தவொரு கருத்து நிலையும் விமர்சனத்திற்குள்ளாக்கப்படும் என்பதை அறியலாம். அந்த வகையில் சாதி வகையில் ஏற்கப்பட்டும் மற்றொரு வகையில் மறுக்கப்பட்டும் வந்துள்ளது. ஏற்பவர்களுக்கு சாதகமாகவும் மறுப்பவர்களுக்கு பாதகமாகவும் அமைந்திருந்த இக்கருத்து நிலைகளின் தோற்றம் 'தமிழ்நாட்டில் பிராமணர்களுக்குச் சமமாக தங்களைக் கருதிக்கொண்ட சைவர்களை முதலியார், பிள்ளை, சைவச்செட்டியார்கள், நகரத்தார், கவுண்டர் முதலிய நிலப்பிரபுத்துவ வர்க்கத்தைச் சார்ந்தவரும் சமூக நிலையில் பிராமணர்களுடைய ஆதிக்கம் தங்களுக்கு வேண்டுமென்று எண்ணினர். ஆங்கில ஆதிக்கத்தில் அறிவாளி வர்க்கமாகத் தாங்கள் உயர வேண்டுடிமென எண்ணினர். பிராமணர்களுடைய ஆரிய நாகரீகக் கொள்கை இவர்களுக்கு வரப்பிரசாதமாகக் கிடைத்தது. இவர்களும் ஒரு தத்துவத்தை உருவாக்கிக் கொண்டனர். அதற்கு அடிப்படை ஆரிய திராவிட நாகரீகங்களிலுள்ள முரண்பாடுகளைப் பற்றி, ஆங்கில ஆசிரியர்களின் கருத்துகள்தாம். தமிழிலக்கியத்தில் இவர்கள் தென்னாட்டுப் பெருமையைக் கண்டார்கள். தமிழின் சிறப்பையும் தமிழ்நாட்டின் தொன்மையையும் நிறுவ இவர்கள் வரலாறு காணத் துணிந்தனர். இச்சமயம் 'மோகன்ஜதாரோ, ஹரப்பா' அகழ்வு ஆராய்ச்சிகள் வெளிவந்தன. அவற்றைப் பற்றி ஹீராஸ் பாதிரியார் என்ற மேனாட்டு ஆராய்ச்சியாளர் கருத்துகளை விமர்சனம் எதுவுமின்றி அப்படியே ஏற்றுக்கொண்டனர். பிராமணர்கள் ஆரிய உயர்வைப் பற்றி எழுதினால் இவர்கள் ஆரிய இழிவையும் திராவிட உயர்வையும் பற்றி எழுதினர். '1 நிலப்பாகுபாடு மற்றும் தொழில் பிரிவுகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட சாதி, சங்க காலத்தில் அரசன், அந்தணன், வணிகன், வேளாளன் என்பதாகத்

தொடங்கியது. இடைக்காலத்தில் அவை சார்ந்த பண்புகள் , சிறப்புகள் குறித்து உண்டான பெயர்கள் சாதி பற்றிய பெயர்களாக மாறிப்போயின.

சமய இலக்கியங்கள் வளர்ச்சியடைந்த பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் ஆழ்வார்களிடையே கடவுளர் பற்றிய போட்டிகள் , பாடல்களின் வாயிலாக மாற்று சமயத்தை இழிவுபடுத்தும் தன்மைகள் இருந்துள்ளன. தவிர சாதி வேறுபாடுகள் காணப்படவில்லை. எனினும் ' பிற்பட்ட சோழர் காலத்தில் சாதிகள் நன்கு வேரூன்றி வளர்ந்தன. தொழில் முதலியன பற்றிய பெயர்கள் எல்லாம் பிறவி பற்றிய சாதிப் பெயர்களாகக் கருதப்பட்டன. சமுதாயத்தில் இன்னின்ன வகுப்பார் காலில் செருப்பணிந்து கொண்டு இன்ன தெருக்கள் வழியே நடக்கக் கூடாது. இன்னின்ன வகுப்பார் தெருக்களில் நுழையவே கூடாது. இன்னின்ன வகுப்பார் மாடிவீடு கட்டலாகாது. அங்ஙனம் கட்ட வேண்டுமாயின் அரசாங்க இசைவு வேண்டும். இசைவு பெற்றுக் கட்டினாலும் இன்னின்ன வகுப்பார் இத்துணைச் சன்னல்களுக்கு மேல் வைக்கக்கூடாது என்ற வரையறைகள் ஏற்பட்டன. '2 முதலில் தொழிலைக் காரணமாக்கிப் பிரித்தாளப்பட்ட பலதரப்பட்ட மனிதக் குழுக்கள் தங்களிடையே வளர்த்துக்கொண்ட பொறாமை குணங்களால் மற்ற இனக்குழுக்களின் வளர்ச்சிகளைத் தடுப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இதனால் சாதி தமிழ்ச் சமுதாயத்தில் வேரூன்றியது மட்டுமின்றி ஒற்றுமை இழந்து மக்கள் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

சாதியானது தொழில் அடிப்படையில் உருவாக்கப்பட்டது எனச் சொல்லப்பட்டதே தவிர தொடர்ந்து இந்நிலை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதற்கும் , கல்வி மறுக்கப்பட்டு , அடிமைப்படுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டவர்களாகவே, தாழ்த்தப்பட்டவாகளாகவே வாழ்வதற்குமான காரணங்களை ஆராய்ந்து பார்த்தோமேயானால் பண்பட்ட திராவிட வாழ்க்கை முறைகளைச் சிதைத்து பிராமணர்களுக்கு நிகராகத் காட்டிக்கொள்ள நினைத்த ஆதிக்கவாதிகளின் சூழ்ச்சிதான் என்பது தெளிவாகிறது.

**சாதியும் சாதிய எதிர்ப்புகளும்**

சாதிகள் உருவானபோது சாதிய எதிர்ப்புகளும் உருவாகிவிட்டன. சாதியப்பாகுபாடுகளால் எவ்வித வளர்ச்சி நிலைகளும் ஏற்பட்டதில்லை. பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைந்துவிட்ட மனிதன் பிறரைத் தனக்குக் கீழாகவும் , ஏவல் பணி செய்பவர்களாகவும் , குறிப்பாக எக்காலத்திலும் பொருளியல் வலிமை மிக்கவர்களாக மாறிவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்தத் தொடங்கினான். உயர்வு தாழ்வுக்கு வழிவகுத்த இத்தைகையப் போக்கு 'சாதி' என்பதாக வளர்ந்து வழிவழி அடிமைகளையும் ஆதிக்கச்சாதி மனிதர்களையும் உற்பத்தி செய்துகொண்டது. இத்தகைய அடிமைத்தளத்திலிருந்து விடுபடவும் , உரிமைகளை அனுபவிக்கவும் இயலாத சமூகத்தினர் சாதியக் கட்டமைப்புகளை உடைத்துத் தங்களுடைய முன்னேற்றங்களுக்குத் தடையாக விளங்கும் உயர்குடிகளையும் சாதிகளையும் எதிர்த்து வந்துள்ளனர். சமூக ஒற்றுமையை விரும்பிய அக்கால பகுத்தறிவுவாதிகளான சித்தர்கள் பாடல்களில் சாதிய எதிர்ப்புகள் காணப்படுகின்றன. அதில்,

'ஆண் சாதி பெண் சாதி ஆக இருசாதி
வீண் சாதி மற்ற எல்லாம் - குதம்பாய்
வீண் சாதி மற்ற எல்லாம்'3

என்னும் குதம்பைச்சித்தர் பாடல் ஆண் , பெண்ணைத் தவிர வேறு எந்த சாதி வரினும் அது வீணானது என்கிறது. தாயுமானவர் , இராமலிங்க அடிகள் ஆகியோரும் சாதிகளைச் சாடியுள்ளனர். பின்வந்த விவேகானந்தர், 'சாதிகள் அழிந்தால் தான் இந்தியா உருப்படும் ' என்கிறார். 'சாதி கேட்காதே சாதி சொல்லாதே' என்பார் நாராயணகுரு அடிகளார். 'பறைச்சியாவ தேதடா பணத்தியாவதேதடா இறைச்சிதோ லெலும்பிலும் இலக்கமிட் டிருக்குதோ '4 என்னும் சிவவாக்கியார் பாடலும் சாதிய எதிர்ப்பிற்கு வலு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

சாதித் தீண்டாமையை ஒழிப்பதற்குத் தடையாக பிராமணர்களை விடவும் தாழ்த்தப்பட்டவர்களே பெரும்பான்மை காரணமாகின்றனர் என்பதனைப் பதிவு செய்துள்ள அம்பேத்கர் , 'சூத்திரர்கள்

பிராமணர்களைக் கீழே தள்ள விரும்பினாலும் தீண்டப்படாதவர்கள் தங்களுடைய நிலைக்கு உயர்ந்துவிடுவதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் தீண்டப்படாதவர்களுடன் சேர்ந்து சமூகத்துறையில் மேல்படிகளெல்லாம் ஒரே மாதிரியாகக் கீழிறங்குவதை விடக் தங்கள் மீது பிராமணர்கள் சுமத்துகின்ற அவமதிப்புகளைத் தாங்கிக்கொள்ளவே விரும்புகின்றனர். '5 என்கிறார். மேலும் 'இரண்டாயிரம் ஆண்டுகளாகப் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவரும் 'சாதிகள் பல பேசும் சழக்கர்காள் உங்கள் சாத்திரமும் கோத்திரமும் கொண்டென் செய்வீர் ' என்று அப்பரடிகளும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவனும் ' என்று திருமூலரும் 'சாதி இரண்டொழிய வேறில்லை ' என்று ஔவையும் 'சாதிப் பிரிவினில் தீ மூட்டுவோம் ' என்று பாம்பாட்டிச் சித்தரும் ' சாதிகள் இல்லையடி பாப்பா குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் ' என்று பாரதியும் பாடிச் சென்ற பின்பும் சாதி ஏன் இன்னும் ஒழியவில்லை '6 என்னும் கி. நாச்சிமுத்துவின் வினாவும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

சாதிய இழிவுகளிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்புகள் எப்போதுமிருக்கின்றன. ஆனால் கையாளத் தெரியாதவர்களாகவும் அல்லது தெரிந்தும் செயல்படுத்துவதற்குத் துணிவில்லாதவர்களாகவும் அல்லது ஆதிக்கவாதிகளை எதிர்ப்பதன் மூலமாகத் தங்களுக்கும் தாம் சார்ந்த மக்களுக்கும் தீங்கு ஏற்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வுகளும் இவர்களை ஒடுக்கி வைத்துள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும் அவ்வாறு பிற சாதியினர் தங்களை அடிமையாக நடத்துவதை ஒரு சமயத்தில் ஏற்று நடந்தனர் என்பதும் அதற்கு அவர்களிடமிருந்த அறியாமையும் , போதிய கல்வியறிவின்மையும் , கிடைப்பதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு சுகம் கண்டதுமே காரணமாக அமைகின்றன. இத்தகைய மனப்பான்மைகளை கவனிக்கொண்டிருந்த பகுத்தறிவாளர்கள் வன்மையாக எதிர்த்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்க் கவிதைகளில் சாதிய எதிர்ப்புகள்

சங்க காலம் முதல் நவீன இலக்கியக் காலம் வரை சாதி பற்றிய பதிவுகள் இ ;டம்பெற்று வந்துள்ளன. சங்க காலச் செய்யுள்கள் , நீதி இலக்கியங்கள் , காப்பியங்கள், சமய இலக்கியங்கள் , சிற்றிலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் எனப் பலவற்றிலும் சாதி , சாதிய எதிர்ப்புகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. குறிப்பாக சமூகத்திலும் சமுதாயத்திலும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்திட வேண்டுமென்ற எதிர்பார்ப்புகளுடன் இயற்றப்பட்ட தமிழ்க் கவிதைகளில் சாதிய எதிர்ப்புகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்பு வந்த கவிதைகளில் சாதிய எதிர்ப்புகள் நிரம்ப உள்ளன.

சாதிய எதிர்ப்புகள் பற்றிய கவிதைகளை இயற்றியதில் மகாகவி பாரதியாரின் பங்களிப்பு அளப்பரியது. கடுமையான கட்டுப்பாடுகள் மூலமாக சாதியை உயர்த்திப் பிடிக்கும் நிலைகளை அகற்றியொழித்து சாதி சமயமற்ற சமுதாயம் அமைந்திட பாடுபட்ட இவர் சூத்திரர் அல்லாதோர் இயற்றிவைத்துக்கொண்ட சட்டங்களைச் சாடுகின்றார்.

'சூத்திரனுக்கொரு நீதி தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரஞ் சொல்லிடுமாயின் அது
சாத்திரமன்று சதியென்று கண்டோம்.'7

ஏழை என்றால் சட்டத்தின்படி நடந்துகொள்ள வேண்டும். சட்டம் படைத்தவர் கூட்டத்திற்கு விதிவிலக்கு என்னும் ஆதிக்கப்போக்கினைக் கொண்ட மனிதர்களின் சுயநலம் மிகுந்த கருத்துகளை சதி எனக் குறிப்பிடுகிறார். பாரதியின் வழித்தோன்றல்களின் கவிதைகளிலும் இத்தகைய எதிர்ப்புகள் காணப்படுகின்றன. புரட்சிக்கவி பாரதிதாசன் ,

'இருட்டறையில் உள்ளதடா உலகம் - சாதி
இருக்கின்றது என்பவனும் இருக்கின்றானே'8

என்பார். பகுத்தறிவு கொள்கைகளின் மீது ஈடுபாடு கொண்டிருந்தவரான பாரதிதாசன் கடவுள் மறுப்பு , சாதிமத எதிர்ப்பு, பெண் கல்வி, கலப்பு மணம் குறித்த கவிதைகளைத் தொடர்ந்து இயற்றி வந்தவர் ,

'சாதிப் பிரிவு செய்தார்
தம்மை உயர்த்துதற்கே
நீதிகள் சொன்னாரடி சகியே
நீதிகள் சொன்னாரடி'9

என்கிறார். தமிழர்களுக்குச் சாதியில்லை. பின்னாளில் வந்தவர்கள் தங்களை உயர்த்திக்கொள்வதற்காகச் சாதியப் பிரிவுகளை ஏற்படுத்தி வைத்தனர். இவையாவும் அவர்களுடைய சுயநலம் சார்ந்தவையாக அமைத்துக்கொண்டதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

குமரி மாவட்டம் திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இருந்த காலகட்டத்தில் கடுமையான சாதியப் பாகுபாடுகள் காணப்பட்டன. பார்ப்பனர்கள் தவிர மற்ற சாதிப் பெண்கள் தங்கள் மார்பகங்களை மறைக்கக்கூடாது என்றும் , மார்பகத்தைத் திறந்து போடுவது உயர் சாதிகளுக்குத் தருகின்ற மரியாதை என்று நம்பவைக்கப்பட்டனர். சாதிய ஒடுக்குமுறைகளைச் சமகாலகட்டத்தில் உணர்ந்தறிந்த கவிஞர் கவிமணியின் கவிதையொன்று,

'சாதி சாதி என்று நிதம்
சண்டை போட்டு மண்டைகளை
மோதி மோதி உடைப்பதொரு
மூடச் செயலென் றுணரீரோ'10

எனச் சாதி பேசுபவர்களையும் , சாதியின் பெயரால் பிறரை இழிவுபடுத்துவதையும் சண்டையிட்டுக் கொள்பவர்களையும் அறிவற்றவர்களெனப் பதிவு செய்துள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

நவீனத் தமிழ்க்கவிதைகளிலும் சாதியங்களை எதிர்த்தப் பதிவுகள் பெரும்பான்மை காணப்படுகின்றன. வாழ்வியல் அடிப்படையில் ஒடுக்கப்பட்டு வந்த மக்களின் நிலைகளை எழுதியவர்களும் தாங்களே அனுபவங்களின் வாயிலாக உணர்ந்தவர்களும் தம்முடைய இயலாமை , கோபம், எதிர்ப்புகளை கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளனர். அன்பாதவன் , அழகியபெரியவன், விழி.பா. இதயவேந்தன் , கே.ஏ. குணசேகரன், தலித் சுப்பையா , மதிவண்ணன், என்.டி. இராஜ்குமார் , சுகிர்தராணி, கு. உமாதேவி , போன்றோர் தாம் அனுபவத்தினூடாக பெற்ற வலிகளையும் , வன்மைகளையும் கவிதையாக்கியுள்ளார். எடுத்துக்காட்டாக,

'செத்த மாட்டின் தோலை உரித்ததற்காய்
உயிரோடு எங்களை அடித்து கல்லெறிந்து கொன்றீர்கள்
சாகாமல் செத்த நானிந்த நாடு முழுவதும்
ஒரு கலவரத்துடன் உருவெடுத்து அலறி மிதப்பேன்
நாடு முழுவதும் தேசம் முழுவதுமொரு
கொலையுண்ட தெய்வங்களாய் எழுந்து நிற்பேன்'11

என்னும் என்.டி. இராஜ்குமாரின் கவிதை , பன்னெடுங்காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த வலியை விளக்குவதாக அமைந்துள்ளது. கோழைகளிடத்தில் வீரம் இல்லை என்பதில்லை , அதனைப் பயன்படுத்துவதற்கான காலம் கூடவில்லை அவ்வளவுதான். ஒடுங்கிக் கிடந்த கோபத்தின் உச்சமே கடவுளாகி எதிர்த்து உயர்ந்து நிற்கும் நிலை என்பதை கவிதைச் சுட்டுகின்றது.

இன்குலாப் கவிதைகளில் சாதிய எதிர்ப்புகள்

திராவிட இயக்கத்தின் கொள்கைகளை உள்வாங்கிக்கொண்ட கவிஞர் இன்குலாப் , இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உச்சத்தில் அடையாளம் காணப்பட்டவர். வெண்மணி நிகழ்விற்குப் பிறகு மார்க்சிய , அம்பேத்கரிய, பெரியாரிய சிந்தனைகளைக் கவிதைகளாக்கினார். அரசியல் , சமூகம், பொருளாதாரம், பெண்ணடிமைத்தனம், சாதி,மத எதிர்ப்புகள் எனப் பன்முகப்பட்டமைந்த இவருடைய படைப்புகளில் குறிப்பிடத்தக்க நூலான 'காந்தள் நாட்கள் ' கவிதைத் தொகுப்பில் பல்வேறு நிலைகளில் சாதிய எதிர்ப்புகளைப் பதிவுசெய்துள்ளார்.

**கல்வி**

அரசன், அந்தணன், வணிகன், வேளாளன் என்ற பிரிவுகளடிப்படையில் அந்தணன் கல்வி போதிக்கக் கூடியவனாகவும் , அரசன், வணிகன் முதலானோர் கற்பவர்களாகவும் இருந்து வந்தனர். வேளாளர்களான விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டு வந்துள்ளது. பல்வேறு போராட்டங்களுக்கு இடையில் , ஒடுக்கப்பட்ட மக்கள் பள்ளிகளுக்கு வருகின்ற சூழலில் அவர்களைத் தொடர்ந்து இழிவுபடுத்துதல் , அவமதித்தல் போன்ற செயல்களில் ஆசிரியர்கள் சிலர் நடந்துகொள்வதை இன்குலாப் கவிதையாக்கியுள்ளார்.

'துரோணாச்சாரியின் கையில்
வில்லாய் இருந்தது
ஆண்டுகள் கடந்தும்
செல்லரிக்காது
வகுப்பறையில்
ஒரு
பிரம்பாய் நீண்டது
இன்னும்
பாரதம் நீடிக்கும் மட்டிலும்
பள்ளி சுவர்களில்
குருதி கசியும் விடுதலை அறியாத துருப்பிடித்த கூண்டுகளில்
ஆசிரியன்
ஆசாரியனாய் நுழைகிறான்
கையில் பிரம்புடன்
மனசில் பூணூலுடன்'12

காலம் மாறினாலும் தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் வன்மக் குணமானது மாறியதாகத் தெரியவில்லை. பள்ளி மாணவர்களிடத்தில் சாதிப் பாகுபாட்டு மனப்பான்மையுடன் நடந்துகொள்ளும் எந்த பிற சாதியைச் சேர்ந்த ஆசிரியனாக இருந்தாலும் கூட ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிராக மனதில் பூணூல் அணிந்த பிராமணச் சமூக குருவாகத்தான் தம்மைக் காட்டிக்கொள்ள முனைப்பு காட்டுபவனாக ஆகிவிடுகிறான். இதனால் மாணவர்களின் கல்வி கெட்டழிந்து எதிர்காலம் கேள்விக்குறியாவதை உணர மறுக்கின்றனர் என்பதை ஆசிரியரால் தாக்கப்பட்டு கண்களை இழந்த சேலம் தனம் என்ற மாணவிக்கு ஏற்பட்ட கொடுமை மூலமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்பேத்கர்

சாதிய ஒடுக்குமுறைகளை எதிர்த்து பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்ததுடன் , உரிமைகளை அடையும் வரையில் ஓயாமல் உழைத்த தலைவர் அம்பேத்கர். இவருடைய கொள்கைகளைக் கவிதையாக்கிய இன்குலாப் , விளிம்பு நிலையில் வாழ்கின்ற மக்களுக்கான சுதந்திரம் கிடைக்கும் வரை எந்தவித கொண்டாட்டங்களும் ஏற்றுக்கொள்ள முடியாததென ஒரு குடியரசு தினத்தில் தம்முடைய எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார். அதில்,

'மலந் திணித்த கைகளும்
வல்லாங்குச் செய்த குறிகளும்
ஒரு குறையுமின்றி ஒன்று பட்டுக் கொண்டாட
இயல்பென்று அமைதி கொள்ளலாம்
இந்தியா என்கிற பாதம்
மௌனம் காக்குமோ
உன் எழுத்தும்
வழிமொழியும்
என் பேனாவும்'13

என்கிறார். அதிகார வர்க்கத்தில் , அத்துமீறல்கள் நடைபெற்று வரும் சமுதாயத்தில் நாடு விடுதலை அடைந்து எத்தனை ஆண்டுகள் ஆனால் என்ன அடக்குமுறைகளுக்குள்ளாக்கப்பட்ட மக்களின் வாழ்வில் இன்றளவும்கூட விடுதலையை உணர்ந்தவர்கள் இல்லை. கொண்டாட்டங்கள் உண்மையல்ல ஏனெனில் விடுதலை அனைத்து மக்களுக்கானது என்றாகும் வரை அதனை ஏற்க முடியாதென எதிர்க்கின்றார்.

வெண்மணி சம்பவம்

கூலி உயர்வு கேட்டதற்காக உயர்சாதியினரால் கொளுத்தப்பட்ட உயிர்களை இன்றளவும் சிந்தித்துப் பார்ப்பதற்கு மனம் வராது. எதிரெதிர் இரு தரப்பினர்களிடையே சண்டைகள் நடந்து முடிந்ததற்குப் பின் நீதிமன்ற சாட்சிக்கு இச்சம்பவத்திலிருந்து சார்பற்ற சாட்சிகளைக் கேட்டு , உயர்சாதி எண்ணத்தை உள்ளுக்குள் ஒளித்துவைத்துக் கொண்டிருந்த நீதிபதியைக் கவிதை வழிச் சாடுகிறார் இன்குலாப்.

'ஐயா நீதிமானே
எதத்தான் நம்புனீங்க?
குஞ்சும் குளுவானுமா
நாற்பத்து நாலுபேர
உசுரோட கொளுத்துனத
நம்பமுடியாதுன்னுதான்
அந்த மகராசனும் சொன்னான்'14

என்னும்போது உரிமைகளைப் பறித்து தனித்துவிடப்பட்ட மக்களின் வாழ்நிலை , நீதிமன்றங்களின் மூலமாவது தக்கவைக்கப்படும் என்று என்னும்போது சட்டத்திலும் சாதியம் மேலோங்கி சமத்துவம் எடுபடாமல் மக்கள் அலைக்கழிக்கப்பட்டமைத் தெளிவாகின்றது. செருப்பால் அடித்து , இரும்புக்கோலால் சுட்டு, கால்களில் விழச்செய்து , மலந்திணித்து, கிணற்றில் மின்சாரம் பாய்ச்சி , பாலியல் பலாத்காரம் செய்து வதைப்பதற்கு உயர்சாதியினர் தயாராக இருக்கின்றனர் என்பதைக் குறித்துள்ளார் ;. இதனை,

'ஆறுதலா ஒரு சொல்லும்
மொகம் பொதைக்க ஒரு தோளும்
கண்ணத் தொடைக்க ஒரு வெரலும்
காயத்துக்கு ஒரு மருந்தும்
எங்க சனமில்லாம
உங்க சனத்திடமிருந்து
என்னைக்கும் போல
அன்னைக்கும் வரல'15

என்ற கவிதை வரிகள் மூலம் அறியலாம். மனிதநேயம் இல்லாத வாழ்க்கை மிகக்கொடிது. சாதிபார்த்தலில் கவனம் செலுத்துபவர்களுக்கு உயிரின் முக்கியத்துவம் விளங்காமல் போனது பேரவலம்.

சாதியை ஒப்புக்கொள்பவனின் வாக்குமூலம்

சாதியை வெளிக்காட்டிக்கொள்ளத் தயங்குபவர்களுக்கு இடையில் இச்சாதியில் பிறந்தவன் என்பதில் பெருமகிழ்வு கொண்டவர்கள் இருக்கவே செய்வார்கள். இவர்கள் ; மனிதத் தன்மைப் பெற்றவர்களாகப் பதிவு செய்யும் இன்குலாப் , சுயசாதி அடையாளத்தை வெறுத்து உயர்சாதிக்காரர்களாகக் காட்டிக்கொள்பவர்களால்; தான் சாதிய மீளவும் கட்டமைக்கப்படுகின்றது என்பதை உணர்த்தும் வகையில் சுயசாதியை அறிவுறுத்தும் பொருட்டு நாத்திகம் நந்தனாரின் நினைவாக கவிதையொன்றை இயற்றியுள்ளார்.

'நினைவிலில்லை
அறிமுகமான நாளும் இடமும்
சொன்னவை மட்டும் மறதியில் இல்லை
'நான் ஒரு முடிதிருத்தும் தொழிலாளி'

தாழ்வுணர்வு தீண்டாத
பெருமிதச்சொற்கள்
மனிதனை அடையாளம் காணும்
கணங்கள் அரிதானவை
அரிதான கணம் - அது! அரிதான மனிதன் அவன்'16

**பறை**

சமூகத்தில் இழிவானதாகப் பார்க்கப்படும் பழமையான இசைக்கருவி பறை. வீரத்தின் அடையாளமாகப் போர்க்களங்களில் இசைக்கப்பட்டதும் , சிவனோடு தொடர்புபடுத்திப் பேசப்படும் கருவியானது தொடக்கக் காலங்களில் சுப நிகழ்வுகளில் இசைக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் இறப்பு முதலிய சடங்குகளில் மட்டுமே கையாளக்கூடியதாக பறை மாறிப்போனது. பறை பற்றிய கவிதையில் ,

'கேள் எனக்குள்
ஓடை முணுமுணுக்கும்
அருவி முழங்கும்
எனக்குக் குழல் இனிது யாழ் இனிது
பறை இனிது இடி இனிது'17

என்கிறார். இசையை இசையாக மட்டுமே பார்க்க வேண்டுமே தவிர இசைப்பவர்களைக் கவனிக்க வேண்டியதில்லை. சாதிகளுக்கு அப்பாற்பட்டது இசை. இசை மனிதர்களில் உண்டாக்கக்கூடிய எழுச்சி , இனிமை, முக்கியத்துவம் பெற வேண்டும். இடியோசையையும் அழகியல் அடிப்படையில் கேட்க முடியுமென்கிறார்.

**அரசியல்**

அரசியல் அனைத்து மக்களுக்கானது. சட்டங்கள் பொதுவானது. எனினும் அதிகாரமிக்க உயர் பதவிகளை உயர்சாதியினர் மட்டுமே அனுபவிக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்களாக இருந்தனர். சுய சாதி விடுதலைக்காகப் பாடுபடுபவர்களாகத் தங்களை வெளிக்காட்டிக்கொண்டு பிற சாதியினருக்காகப் போராடும் தன்மை மிக்கவர்களாகவும் நம்பவைத்தனர். இதனால் ஆட்சி அதிகாரம் அவர்கள் வசமே இருந்து வந்தது. பின்னாளில் இவற்றை உணர்ந்துகொண்ட தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே முளைத்த உரிமை மீட்புத் தலைவர்கள் சுயசாதி மக்களை அடகுவைப்பவர்களாக மாறிப்போயினர். இவர்களைத் துகிலுரிக்கும் இன்குலாப்,

'தனக்கான பேரங்கள்
இனத்துக்கான பேரங்களாய்
செய்யப்படும் ஒப்பனையில்
காணாமற் போகிறது
விடுதலையின் திசைமுகம்'18

என்று பதிவு செய்கிறார். இன்றைய சூழலில் சாதிய இழிவுகளிலிருந்து மக்களை மீட்பதாகப் பெருங்கூட்டம் திரட்டும் தலைவர்கள் தங்களுக்கான பொருளாதாரத் தேவைகளுக்காக பயன்படுத்திக்கொள்கின்றனர். இதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கான விடுதலை கேள்விக்கு உள்ளாகிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

கூலி

விவசாயக் கூலித் தொழில்களில் ஈடுபடும் தாழ்த்தப்பட்ட ஆண்கள் , பெண்களுக்குக் கூலி தருவதில் உயர்சாதியினர் பாகுபாடு காட்டி வந்துள்ளனர். இதனை கேள்விக் கேட்பதாக பின்வரும் கவிதையைக் கவிஞர் இயற்றியுள்ளார்.

'கேப்பாரில்லாம நடந்த
பண்ணையம் பழய கதெ - இப்பொ
மதகில் புதுவெள்ளம் - பிரிக்கும்
வரப்ப வாய்க்கா கடக்கும்'19

பன்னெடுங்காலமாக தலைமுறை முறையாக உயர்சாதியினர் நிலங்களில் கூலி வேலை பார்த்து வந்தவர்கள் தங்களுக்கான கூலி வரன்முறை எதுவும் எதையும் கொண்டிருக்கவில்லை. காலம் மாறும் போது அவர்களுக்கான பொருளாதாரத் தேவைகளும் உரிமைகளைப் பெற வேண்டும் என்கிற உத்வேகமும் எதிர்த்துச் செயல்படத்தூண்டுகின்றது. பழைய முறைகளை மாற்றி சாதியப் பாகுபாடுகளைத் தகர்த்தெறிந்து கூலி சமத்துவத்திற்கானத் தேவைகளை எடுத்தியம்புவதாகக் கவிதை அமைந்துள்ளது.

**முடிவுரை**

'என்
கவிதை முளைவிடும்
மனுசங்க வெளியை
உன்
கால்விரல் நகமும்
தீண்டாதது போலவே
மேட்டிமைத் திமிரும்
உன்
சாப வாசலில் கூட
நீளவே நீளாது
என் மயிரின்
நிழலும்'20

சக மனிதனை மதிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமமான எதிர்வினை இருக்கும் என்பதை அனைவரும் உணர வேண்டும். அவ்வாறு மதியாதார் தலைவாசல் மிதியாமல் இருப்பது ஆகச்சிறந்த பண்பாடாகும்.

**துணை நூல்கள்.**

நா. வானமாமலை, தமிழக வரலாறும் பண்பாடும், ப – 36

மா. இராசமாணிக்கனார், தமிழக வரலாறும் பண்பாடும், ப – 341

மேலது., ப – 342

க. பஞ்சாங்கம், இலக்கியத்திறனாய்வும் கோட்பாடுகளும், ப – 249

ஆர். நல்லக்கண்ணு, சாதிய ஒடுக்குமுறையும் சமத்துவப் போராட்டமும், ப – 25

கி. நாச்சிமுத்து, கரையேற்றுங் கருத்துக்கள், ப – 31

க. சந்திரசேகர் (தொ.ஆ), பாரதியார் கவிதைகள்

பாரதிதாசன் கவிதைகள்

மேலது.,

கவிமணி கவிதைகள்

என்.டி. இராஜ்குமார், காட்டாளன்;

இன்குலாப், காந்தள் நாட்கள், ப – 7

மேலது., ப – 15

மேலது., ப – 37

மேலது., ப – 36

மேலது., ப – 44

மேலது., ப – 44

மேலது., ப – 108

மேலது., ப – 140

இன்குலாப், எழுதமாட்டேன் (கவிதை)